**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(28.05.2025 முதல் 01.06.2025)**

**அறிக்கை எண் 16/2025** **தேதி. 27.05.2025**

**நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

நாகப்பட்டினம் மாவட்டத்தின் 23.05.2025 முதல் 28.05.2025 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 33 - 37 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 94 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 - 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தெற்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை நாகப்பட்டினம் (28.05.2025 முதல் 01.06.2025)**

| கடந்த வார வானிலை (23.05.2025 மற்றும் 26.05.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 01.06.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 23/05 | நாள்-2 24/05 | நாள்-3 25/05 | நாள்-4 26/05 | தேதி | நாள்-1 28/05 | நாள்-2 29/05 | நாள்-3 30/05 | நாள்-4 31/05 | நாள்-5 01/06 |
| 0.0 | 31.2 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 5 | 0 | 4 | 2 |
| 37 | 36 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 28 | 32 | 31 | 34 |
| 28 | 23 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 27 | 27 | 27 | 28 |
| 3 | 8 | 8 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 4 | 5 | 6 | 4 |
| 61 | 94 | 72 | 73 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 70 | 70 | 80 |
| 72 | 81 | 80 | 75 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 50 | 50 | 60 | 50 |
| 10 | 7 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 18 | 20 | 20 | 18 | 18 |
| தெற்கு | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | காற்றுவீசும் திசை | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

**நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 29.05.025, 31.05.2025 மற்றும் 01.06.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28 - 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 18 - 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | வரும் நாட்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சவும். |
| **நெல்** | **நடவு வயல்** | நடவு செய்யும் பொழுது பதினெட்டு முதல் இருபத்தி இரண்டு நாட்கள் வயதுடைய நன்கு வாளிப்பான நாற்றுக்களை உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (1 கிலோ/ 125 மிலி) மற்றும் பாஸ்போபாக்டீரியாவை (1 கிலோ, 125 மிலி) 40 லிட்டர் தண்ணீரில் இட்டு நாற்றுகளின் வேர் பாகம் கரைசலில் நன்கு நனையுமாறு 15 முதல் 30 நிமிடங்கள் வரை வைத்திருந்து பிறகு நடவு செய்ய வேண்டும். |
| **பருத்தி** | **வளர்ச்சி பருவம்** | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிப்பதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு காய்கள் அதிகம் பிடிக்க உதவுகிறது. |
| **கரும்பு** | **வளர்ச்சி பருவம்** | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக 5 மாதங்களுக்கு மேலான கரும்பு பயிறில் தோகையை நீக்கி விட்டம் கட்டவும். |
| **தென்னை** | | உகந்த வானிலை இருப்பதால் தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்கவும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | விவசாயிகள் கறவை மாடுகளுக்கு போதிய அளவு தாது உப்பு கலவையை அளிக்கலாம் |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் மிக இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் தேவைக்கேற்ப நீர் பாய்ச்சவும்.

**இயக்குநர்**